புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • நவம்பர், 13 2025 • புரட்சி 25 • முழக்கம் (ISSUE) 44 • விலை(PRICE) ரூ.6.00

## அறிவுத் திருவிழாவில் கழகத் தலைவர் பேச்சு

# பெரியார் சொன்னார்; தி.மு.க. செய்தது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா நிறைவையொட்டி, அதன் இளைஞர் அணி சார்பில் அறிவுத் திருவிழா நடைபெற்றது. வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நவம்பர் 8ஆம் தேதி 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்ற நூலை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டார். இந்நூலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தோழர் பிரகாசு ஆகியோர் கட்டுரை எழுதியுள்ளனர். நூல் வெளியீட்டைத் தொடர்ந்து 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' என்ற இரண்டு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. நவம்பர் 8–ஆம் தேதி முதல் 16–ஆம் தேதி வரை முற்போக்கு புத்தகக் காட்சியும் நடைபெறுகிறது. இதில் அரங்கு எண் 22–இல் கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகமும் பங்கு பெற்றுள்ளது.

கருத்தரங்கில் மொத்தம் 10 அமர்வுகள் நடைபெற்றன. அதில் கடைசி அமர்வு பெரியாரிய இயக்கத் தலைவர்களைக் கொண்டு நிறைவுற்றது முத்தாய்ப்பாக அமைந்தது. புலவர் செந்தலை கவுதமன் தலைமையில் நடைபெற்ற அந்த அமர்வில், 'கருஞ்சட்டை கழகமும் கருப்பு சிவப்பு கழகமும்' என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'தி.மு.க.வின் போராட்டக் களங்கள்' என்ற தலைப்பில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வாலாசா வல்லவன், 'திராவிட அடையாளத்தில் தமிழர் அரசியல்' என்ற தலைப்பில் தந்தை பெரியார் திராவிடர் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் சீனி விடுதலை அரசு ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி அரசியல் புத்தகங்களின் அணிவகுப்பான முற்போக்கு புத்தகக் காட்சிக்கு சென்று புத்தக அரங்குகளைப் பார்வையிட்டார். நிகழ்வில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண், வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், அமைப்பாளர் தட்சணாமூர்த்தி, திருவல்லிக்கேணி பகுதி தலைவர் கோபிநாத், அமைப்பாளர் சூர்யா, தோழர்கள் சிகாமணி, ஏசுகுமார், இரண்யா, இளைஞரணி தோழர்கள் அஜித், இம்மானுவேல், அம்பத்தூர் சதீஸ் ஆகியோர் உடனிருந்தனர்.







### கழகத் தலைவரின் உரை:

இயக்கங்களைப் பற்றி உங்களுக்கு தெரியும். அது இலட்சியங்களை எடுத்து முன்வைக்கும். இலக்குகளை எடுத்துச் சொல்லும். அதை நோக்கி மக்களை இயங்க வைக்க முயற்சித்து பரப்புரை செய்யும், போராடும். ஆனால் கட்சிகள்தான் ஆட்சி அமைத்து அவற்றை நடைமுறைப்படுத்தும். அரசியல் கட்சி என்று வருகிறபோது அதற்கான எல்லைகள் உண்டு. அரசியலைப் பற்றி சொல்லுகிறபோது பிஸ்மார்க் சொன்னதாக சொல்லுவார்கள். அரசியல் இயக்கம் சாத்தியமானவற்றை செய்யலாம்; பெறக்கூடியவற்றை பெறலாம்; தி ஆர்ட் ஆஃப் நெக்ஸ்ட் பெஸ்ட் என்பார்கள். அதுவே வேண்டும், மிகச் சிறந்ததுதான் வேண்டும் என்றில்லை. சிறந்ததற்கு அருகில் இருப்பதைக்கூட நடைமுறைப்படுத்தி அடுத்த வாய்ப்புக்கு நகர்த்தலாம்.. இப்போது இரண்டையும் சேர்த்துதான் பார்க்க வேண்டி இருக்கிறது.

இயக்கங்களுக்கு இருக்கிற கொள்கையை அரசியல் கட்சிகளால் நடைமுறைப்படுத்த முடியுமா? அத்தனையும் அரசியல் நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புகள் குறைவுதான். ஆனாலும் ஏறத்தாழ அருகில்போய் ஆட்சி நடத்திய கட்சியும், அதற்கான கொள்கைகளை முன்னெடுத்து வைத்த இயக்கமும் இணைந்து இப்போது அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டியவர்களாய் உள்ளோம். அதுவும் அவர்களை அடிப்படைக் கொள்கையான சனாதன ஒழிப்பு, வருணாசிரம ஒழிப்பு என்பதை இலட்சியமாகக் கொண்டு அதற்கான எதிரிகள் அமர்ந்திருக்கிறபோது நாம் பரந்து விரிந்த கூட்டணியாய் நின்று என்று எதிர்க்கிறோம். எதிர்ப்பதற்கு தமிழ்நாடு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தோடு நான் சிலவற்றை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

### 1962–லேயே பெரியார் கூறினார்!

1949–இல் பெரியாரும் அண்ணாவும் பிரிந்திருந்தார்கள். 1967க்கு பிறகுதான் இணைந்தார்கள். ஆட்சிக்கு வந்த பின்னால்தான் ஆதரித்தாரா? இல்லை. அவர் அதற்கு முன்பே கூறியிருக்கிறார். 1962 ஜனவரி முதல் நாள் பெரியார் ஒரு அறிக்கை எழுதினார். 'பார்ப்பனத் தோழர்களுக்கு' என்ற அந்த அறிக்கையின் இறுதியில், 'தேர்தலுக்கு பிறகு அரசியல் திட்டம் எதுவாக இருந்தாலும் சமூக நலத்திட்டங்கள் பார்ப்பன எதிர்ப்பாகத்தான் இருக்க முடியும்' என்று எழுதிவிட்டு,. "இனி கண்ணீர்த் துளி கட்சி தேர்தலுக்குப் பிறகு இந்த நாட்டில் உலவ வேண்டுமானால் பார்ப்பன எதிர்ப்பை கைத்தடியாக பிடித்துக் கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள். இந்த காரியத்துக்கு என்னை அணுகலாம்; நானும் ஆதரவு அளிக்கலாம். எனக்கு சமுதாயத்துறையில் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாரும் எதிரிகள் அல்ல!" என்றார். அப்போது தி.மு.க.வை கண்ணீர் துளிகள் என்றே அழைப்பார் பெரியார்.

திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது தேர்தலைக் கூட அப்போது சந்தித்திருக்கவில்லை. சில மாதங்கள் கழித்துதான் தேர்தல் நடந்தது. ஆனால் பெரியார் சொல்லுகிறார், ஒருவேளை ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த பார்ப்பன எதிர்ப்பு சிந்தனைகளைத்தான் அடித்தளமாக வைத்து இயங்க வேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் இருக்கும். அதில் நான் இப்போது எதிர்த்துக் கொண்டிருக்கிற அல்லது என்னுடன் இருந்து பிரிந்து சென்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் என்னை அணுகினால் நான் ஆதரவு கொடுப்பேன். எனக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிரி அல்ல! பார்ப்பனர்கள்தான் சமுதாயத்துறையில் என்னுடைய எதிரிகள். எனவே அதற்கு ஆதரவு கொடுப்பேன் என்று 1962 தேர்தலுக்கு முன்னால் பெரியார் சொன்னார், 1967–க்கு பின்னால் இணைந்தார். இயக்கமும் கட்சியும் ஒருமித்த சிந்தனையை அடைந்து 1967–இல் இணைந்தார்கள்.

### தீர்மானங்கள் சட்டமாகின!

அடுத்து, பெரியாருடைய லட்சியங்கள் எப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதற்கு சிலவற்றைச் சொல்ல வேண்டும். பெரியார் இயற்றிய மாநாட்டுத் தீர்மானங்கள் பின்னாளில் தி.மு.க. ஆட்சியில் சட்டமானதைப் பற்றி அடிக்கடி நாம் சொல்லிக் கொண்டிருப்போம். ஆம் 1929லே முதல் சுயமரியாதை இயக்க மாநாடு நடைபெற்றது. அதை ஒட்டித்தான், சுயமரியாதை இயக்க நூற்றாண்டில் செங்கல்பட்டில் ஒரு மாநாட்டை திராவிடர் கழகம் நடத்தியது.. அதில் பெரியார் உலகம் அமைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பளமாக கொடுத்த ஒன்றரை கோடி ரூபாய் அன்பளிப்பாக அளித்திருக்கிறார் முதலமைச்சர்.

அந்த செங்கல்பட்டில் 1929–இல் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டின் தீர்மானத்தைதான் 1989–இல் சட்டமாக்கி பெண்களுக்கு சொத்துரிமை வழங்கினார் கலைஞர். செங்கல்பட்டில் மட்டுமல்ல, பெண்களுக்கு சொத்துரிமை வழங்கக்கோரி ஒவ்வொரு மாநாட்டிலும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. ஈரோடு மாநாட்டில் தீர்மானம்; விருதுநகர் மாநாட்டில் தீர்மானம் என தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேறின.

ஆனால் முதல் மாநாட்டு தீர்மானத்துக்கு 60 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டிலும், அதன்பிறகு 16 ஆண்டுகள் கழித்துதான் இந்திய அளவிலான அந்த சட்டங்கள் இயற்றப்பட்டன. தமிழ்நாட்டுக்கு 16 ஆண்டுகளுக்கு பின்னால்தான் இந்திய அளவிலான சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்தினார்கள். நாம்வழிகாட்டி இருக்கிறோம். இப்போது எல்லா மாநிலங்களிலும் இருமொழி கொள்கைக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். கடந்த முறை ஆட்சியில் இருந்தபோது சித்தராமையா கர்நாடக சட்டமன்றத்தில் பேசினார். இந்தியை எதிர்த்துப் பேசினார். "நாம் 50 ஆண்டுகள் பின்தங்கி இருக்கிறோம் நமக்கு முன்னாலே 1967லேயே திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையை கொண்டு வந்துவிட்டது" என்று அப்போது சொன்னார். இப்போது திரும்பவும் பலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார். மராட்டியமும் சொல்லுகிறது.

பெண்களை வெறும் வைத்தியத் தொழிலுக்கும், உபாத்திமைத் தொழிலுக்கும், (ஆசிரிய தொழிலுக்கும்) மட்டுமே எடுக்கிற நிலையை மாற்றி காவல் துறையிலும் இராணுவத்திலும் பெண்களைச் சேர்க்க வேண்டுமென்று விருதுநகர் சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் இயற்றினார் பெரியார். 1973–இல் அதை சட்டமாக்கினார் கலைஞர். தமிழ்நாட்டில் பெண்கள் கொண்ட காவல்துறை படை அமைக்கப்பட்டது.

### சட்டப் போரில் வெற்றிகண்ட தி.மு.க.!

அடுத்து, இந்தியா முழுதும் பிற்படுத்தப்பட்டவருக்கான இட ஒதுக்கீடு என்பது இல்லாமல் இருந்த காலம் இருந்தது. அதற்கான கோரிக்கைகள் பல காலம் வைக்கப்பட்டது புரட்சியாளர் அம்பேத்கர் தன் பதவியை துறந்தபோது கூட பணித்துறவு கடிதத்தில் அவர் சொன்ன செய்திகளில் ஒன்று பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கு எந்த முயற்சியும் இந்த அரசு செய்யவில்லை என்பதும் ஒரு காரணம். தமிழ்நாட்டிலும், மராட்டியத்திலும் மட்டும் அப்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் இருந்தது.

பிற்படுத்தப்பட்டோருக்கான பட்டியல் தயாரிக்க ஒரு ஆணையம் அமைக்கப்பட வேண்டும். அந்த ஆணையம் கணக்கெடுத்து ஒரு பட்டியலை தயாரிக்க வேண்டும், அதன் அடிப்படையில் அந்த மக்களின் மேம்பாட்டுக்கு, முன்னேற்றத்திற்கு திட்டங்கள் தீட்ட வேண்டும் என்று ஒரு பிரிவு அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் அதுதொடர்பாக எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதையும் தன்னுடைய பணித்துறவு கடிதத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் எழுதினார். அவரைத்தான் தாழ்த்தப்பட்டவர் தலைவர் என்பார்கள். அவர் அந்த கடிதம் எழுதவில்லை என்றால், இந்த இந்திய அரசே அதைப் பற்றி யோசித்திருக்காது.

அவசர அவசரமாக கலேல்கர் கமிஷன் அமைத்தனர். வக்பு வாரியத்தில் இந்துக்கள் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதைப்போல, பிற்படுத்தப்பட்டோரை பற்றிய ஆணையத்திற்கு தலைவராக ஒரு பார்ப்பனரை நியமித்தார்கள். காகா கலேல்கரை நியமித்தனர். அவர் என்ன அறிக்கை கொடுப்பார்? நமக்கு தெரியும். அது குப்பைத்தொட்டிக்கு போனது. பின்னாலே மண்டல் ஆணையம் வந்தது. 1980–இல் சமர்பிக்கப்பட்ட அதன் அறிக்கையை, 1990 நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்து, சட்டப் போராட்டங்களுக்கு பின்னால் 1993–இல் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் அதற்கும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால், 1947–க்கு முன்னால் சென்னை மாகாணத்தில் மட்டும் தனிச்சட்டம் இருந்தது. அதற்கு பெயரே, 'செப்பரேட் ரிசர்வேஷன் ஆர்டர் ஃபார் மெட்ராஸ் நான் பிராமின்ஸ்'. சென்னை மாகாணத்தில் இருப்பதைப் போன்ற இட ஒதுக்கீடு, வகுப்புவாரி உரிமை இங்கு இயங்குகிற இந்திய அரசின் துறைகளுக்கும் இருந்தது என்பதை மறந்துவிடாதீர்கள்.

1935லிருந்து சென்னை மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இட ஒதுக்கீடு சட்டங்களை இந்தியா விடுதலை பெற்று ஒன்றரை மாதம் காத்திருந்து, செப்டம்பர் 30–ஆம் நாள் ரத்து செய்தார்கள். உள்துறை ஒரு ஆணையையும், தொடர்வண்டித்துறை ஒரு ஆணையையும் பிறப்பித்தது. நமக்கு கொடுத்திருந்த அத்தனை இடஒதுக்கீடு உரிமைகளும் பறிக்கப்பட்டன. திரும்பவும் பழையபடி நமக்கு எந்த இட ஒதுக்கீடும் இல்லை. தமிழ்நாட்டில் வேறு இட ஒதுக்கீடுகள் இல்லை என்றாகிவிட்டது. ஒன்றிய அரசுப் பணிகளில் அதற்காக மீண்டும் ஒவ்வொரு நிலையிலும் முயற்சிகள் ஒரு பக்கம் நடந்தன.

(தொடரும்)

தலையங்கம்

# அறிவுத் திருவிழாக்கள் பெருகட்டும்!

கோயில் திருவிழாக்கள், குடும்ப விழாக்கள் என நம் நாட்டில் எத்தனையோ திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கோயில்களில் கூட சைவ, வைணவக் கோயில்களில் ஒரு மாதிரியாகவும், கிராமப்புறங்களில் உள்ள மாரியம்மன் கோயில்களில் வேறு விதமாகவும் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. சைவ, வைணவக் கோயில்களின் திருவிழாக்கள் மாரியம்மனை பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை. மாரியம்மன் கோயில் திருவிழாக்களோ ஜாதியை மட்டுமே பொருட்டாக வைத்துக்கொண்டு, யார் பங்கேற்கலாம், யார் பங்கேற்கக் கூடாது என எல்லைக்கோடுகள் வரைந்திருக்கும். அதேபோல குடும்ப விழாக்களிலும் திருமணங்கள் முதல் பூப்புனித நீராட்டு என்பன வரை அனைத்திலும் பிற்போக்குத்தனமே நிறைந்திருக்கும். பொதுவாக கோயில் திருவிழாக்களோ, குடும்ப விழாக்களோ எல்லாவற்றிலும் குடியும், தகராறுமே நிரம்பியிருக்கும்.

இளைய தலைமுறை கற்றுக்கொள்ளவோ, அறிவைப் பெருக்கிக்கொள்ளவோ இத்தகைய திருவிழாக்களில் எதுவும் இருப்பதில்லை, சீரழிவதற்கான சாத்தியங்களை மட்டுமே நிரப்பி வைத்துள்ளன. ஆனால் இத்தகைய பிற்போக்குத்தனங்கள், சமூக சீரழிவுகளுக்கு மாற்றான ஒரு புதிய கொண்டாட்டத்தை தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி. அக்கட்சியின் பவள விழா நிறைவையொட்டி ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற சமத்துவத்தைப் போதித்த வள்ளுவரின் கோட்டத்தில் ‘அறிவுத் திருவிழா’வை நடத்தியிருக்கிறது இளைஞர் அணி.

‘காலத்தின் நிறம் கருப்பு- சிவப்பு’ நூல் வெளியீடு, திராவிட இயக்க அறிஞர்கள், ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்களை கருத்துரை வழங்கச் செய்து ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ என்ற தலைப்பில் 10 அமர்வுகளைக் கொண்ட இருநாள் கருத்தரங்கம், 9 நாட்கள் முற்போக்கு புத்தகக் காட்சி என இந்த அறிவுத் திருவிழாவை தமிழ்நாட்டிற்கான மாற்றுக் கொண்டாட்டமாக அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் முற்போக்கு புத்தகக் காட்சியில் திராவிட இயக்க நூல்கள் என்ற அளவில் மட்டும் சுருக்கிவிடாமல் அம்பேத்கரிய - மார்க்சிய பதிப்பாளர்கள், விற்பனையாளர்களையும் அழைத்து, எல்லோரையும் உள்ளடக்கிய முற்போக்கு விழாவாக நடத்தப்பட்டிருக்கிறது. உலக அரசியல் எல்லாவற்றையும் தங்கள் தொண்டர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சர்வதேச ஏடுகளையும் நூல்களையும் புரட்டிப் பார்த்து, அவற்றை குடிஅரசிலும், விடுதலையிலும், திராவிட நாடு ஏட்டிலும் வழங்கியவர்கள் பெரியாரும், அண்ணாவும். அத்தகைய அறிவுப் பாரம்பரியத்தை இந்த முற்போக்கு புத்தகக் காட்சியின் மூலம் தி.மு.க.வுக்கு மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார் உதயநிதி.

இந்த அறிவுத் திருவிழா பொதுவெளியில் ஏற்படுத்தியிருக்கிற தாக்கம் ஒருபக்கம் இருந்தாலும், தி.மு.க.வுக்குள் ஏற்படுத்தப்போகிற பண்பு மாற்றத்தையும் நாம் கவனித்தாக வேண்டும். தேர்தல் அரசியலில் ஈடுபடுகிற எந்தவொரு கட்சிக்கும் அதிகாரத்தை பிடிப்பதே அவர்களின் இலக்கு. எனினும் தி.மு.க. இந்த அறிவுத் திருவிழாவை நடத்தியதன் மூலம், தாங்கள் ஒரு சரசாரி அரசியல் கட்சியல்ல, அதைத்தாண்டிய சமூக சீர்திருத்த இலக்கு தங்களுக்கு இருக்கிறது என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்தியிருக்கிறது. அதேபோல, தி.மு.க.வில் இருப்போர் எல்லோரும் திராவிட இயக்கத்தின் இத்தகைய அறிவுப் பின்னணியை உள்வாங்கி, ஆகச்சிறந்த கொள்கைவாதிகளாகத் திகழ்வோர்தானா என்றால் அதுவும் நிச்சயம் இல்லை. பலமான கொள்கைப் பின்னணி கொண்டவர்கள், அதிகாரத்தைச் சுவைக்க வேண்டும் என்ற சராசரி அரசியல் எண்ணம் கொண்டவர்கள் என கலவையாகவே உள்ளனர். அ.தி.மு.க.-வில் இருந்து தி.மு.க.வை நோக்கி வந்தவர்களுக்கும் அத்தகைய பலமான கொள்கைப் பிடிப்பு இல்லை. கடந்த 30 ஆண்டுகால தமிழ்நாட்டின் அரசியல் சூழலில் தி.மு.க. இப்படித்தான் மருவியிருக்கிறது.

திராவிட இயக்கத்தின் அடிப்படை இலட்சியங்களில் எம்.ஜி.ஆர். காலமும், ஜெயலலிதா காலமும் எண்ணிலடங்கா ஓட்டைகளை ஏற்படுத்திவிட்டன. இந்த நிலை இப்படியே நீடிக்காமல், அவற்றைச் சரிசெய்து மீண்டும் இளைய தலைமுறை கொள்கைப் பாய்ச்சலோடு, திராவிட அரசியலுக்குள் நுழைய வேண்டும் என்ற ஆழமான இலட்சியப் பார்வை உதயநிதி ஸ்டாலினுக்கு இருக்கிறது. அதன் வெளிப்பாடாகத்தான் அவருடைய இத்தகைய கொள்கை சார்ந்த தொடர் முன்னெடுப்புகளைப் பார்க்கிறோம். தி.மு.க.வை நோக்கி வருகிற இளைஞர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு இளைஞர்களையும் இந்த முற்போக்கு கருத்தியலை நோக்கி ஈர்க்க வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. இந்தித் திணிப்பு, கல்வி உரிமை மறுப்பு என ஆரிய அடக்குமுறைகளுக்கு எதிராக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே மாணவர் படையைத் திரட்டி அரசியல்படுத்திய இயக்கம் திராவிட இயக்கம். ஆனால் இன்றைக்கு அரசியலுக்கு அர்த்தம் புரியாத ஒரு தலைமுறை நம் கண் முன்னே உருவாகியிருக்கிறது. அவர்களுக்கும் திராவிட இயக்கத்தின் அடிப்படை கொள்கைகள், கோட்பாடுகளை புரிய வைப்பது நமது கடமை. அந்தப் பணிக்கு முகவரி தரும் முயற்சியாக இந்த அறிவுத் திருவிழா நிச்சயம் அமையும். இதை இனி ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்போவதாகவும் உதயநிதி அறிவித்திருக்கிறார். இத்தகைய புதுமையான மாற்றுக்கொண்டாட்டங்கள், பகுத்தறிவுச் சிந்தனையை வளர்க்கும் முயற்சிகள் ஏராளம் நடைபெற வேண்டும்.

உதயநிதிக்கும் தி.மு.க. இளைஞர் அணிக்கும் நமது பாராட்டுகள்...

# உருவக் கேலிக்கு உடனடி பதில் தந்த நடிகை!

’அதர்ஸ்’ திரைப்படம் குறித்து, நவம்பர் 6-ஆம் தேதி சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அப்போது இயக்குநரிடம் யூடியூபர் ஒருவர் கதாநாயகியின் எடை எவ்வளவு என்று வக்கிர எண்ணத்தோடு கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார். இதற்கு முன்பும் இத்திரைப்படம் குறித்து, நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், படத்தின் நாயகனிடமும் கதாநாயகியின் எடை எவ்வளவு என்ற அதே கேள்வியை எழுப்பியிருந்தார். மேலும் தன்னுடைய கேள்வியில் என்ன தவறு என்ற தொனியிலும் தொடர்ந்து அவர் பேசிக்கொண்டு இருந்தார்.

அந்த யூடியூபருக்கு பதிலளித்த கதாநாயகி கௌரி கிஷன், "இந்தக் கேள்விக்கும் இந்தப் படத்திற்கும் என்ன சம்பந்தம் உள்ளது? எனது கதாபாத்திரத்தைப் பற்றியோ, அதற்காக நான் என்ன செய்தேன் என்பதைப் பற்றியோ ஒரு கேள்வியும் கேட்கப்படவில்லை. எனது எடை என்னவென்று தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? இதே கேள்வியை ஒரு கதாநாயகனிடம் கேட்பீர்களா?" என்று காட்டமாக பதிலளித்துள்ளார்.

இந்தக் கேள்வி சாதாரணமாகக் கேட்கப்பட்டது என்ற தொனியில் மற்றொருவர் இதை நியாயப்படுத்த, "எனக்கு அதில் எந்த நகைச்சுவையும் தெரியவில்லை, உருவ கேலியை இயல்பான செயலாக மாற்றாதீர்கள்" என்றும் கண்டித்தார். வக்கிரமான கேள்வியை மிக இயல்பாக எழுப்பியதோடு, அதை நியாயப்படுத்தவும் செய்த அந்த யூடியூபருக்கு கண்டனங்களும் குவிந்துள்ளன.

"பெண் திரைக்கலைஞரின் உடல் எடையைக் கேலிக்குள்ளாக்கும் நோக்கத்துடன் கேள்வி கேட்பது அருவருக்கத்தக்கது, அநாகரீகமானது. இதுபோன்று அருவருக்கத்தக்க ஆணாதிக்க மொழியில் செயல்படுபவர்களை சக பத்திரிகையாளர்கள் கேள்விக்குட்படுத்த வேண்டும்" என்று சென்னை பத்திரிகையாளர் சங்கம் கண்டித்துள்ளது. திரைத்துறை பிரபலங்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் பலரும் அந்த யூடியூபரின் ஆணாதிக்க மனநிலையை கேள்வி எழுப்பியுள்ளதுடன், கௌரி கிஷனின் துணிச்சலைப் பாராட்டியுள்ளனர். உருவக் கேலிகளைக் கண்டு அஞ்சி உடைந்து முடங்கும் காலம் அல்ல இது என்பதை, அதைச் செய்வோர் உணர வேண்டும்.

# கழக நூல்கள் விற்பனை அமோகம்!




சென்னை முற்போக்கு புத்தகக் காட்சியில் நிமிர்வோம் பதிப்பக நூல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இது தமிழ்நாடு- சனாதனத்திற்கு எதிரான தத்துவப்போர் இங்கு மட்டும்தான், இடஒதுக்கீட்டின் நோக்கம் ஜாதி ஒழிப்பே, பெரியார் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு, கலைஞரின் ஆட்சி நிர்வாகத்திறன் உள்ளிட்ட நூல்கள் அதிகம் விற்பனை ஆகி வருகின்றன. கழகத்தின் தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் தலைமையில் தோழர்கள் சுரேந்தர், தீபக், இமானுவேல் துரை, சுபாஷ் ஆனந்த், இரண்யா, தாமரை ஆகியோர் முதல் மூன்று நாட்களும் அரங்கில் நூல் விற்பனையில் ஈடுபட்டனர்.

வடிவமைப்புப் பணிகளை இளைஞரணி அமைப்பாளர் அருண், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் கோபிநாத், திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் சூர்யா, தோழர்கள் வீரா, அஜீத் மிக நேர்த்தியாக செய்திருந்தனர்.

# கிறிஸ்தவர்கள் மீதான வன்முறை 5 மடங்கு அதிகரிப்பு

பாஜக ஆட்சியில் 2014-இல் 139-ஆக இருந்த கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் 2024-இல் 934-ஆக அதாவது 5 மடங்கு அதிகரித்துள்ளன. இது வெறும் புள்ளி விவரமல்ல; இந்தியாவின் மதச் சார்பற்ற அடித்தளம் இடிக்கப்பட்டு வருவதற்கான சான்று.

பாஜக அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், சிறு பான்மையினர் மீதான தாக்குதல்கள் திட்ட மிட்ட முறையில் நடைபெற்று வருகின்றன. ’மத மாற்றம்’ என்ற பொய்யான கூச்சல் இதற்காக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் உண்மையில் நடப்பது வேறு. சொந்த நம்பிக்கையைத் தேர்ந்தெடுத்த பழங்குடி கிறிஸ்தவர்கள் ’கர்வாப்சி’ என்ற பெயரில் வலுக்கட்டாயமாக இந்து மதத்திற்கு மாறுமாறு தாக்கப்படுகிறார்கள்.

கர்ப்பிணியான கானிகா காஷ்யப் மீது நடந்த வன்முறை, ஜாம்ஷெட்பூரில் சாதாரண இரவு விருந்தை மதமாற்றம் என்று குற்றம்சாட்டிய கும்பல் தாக்குதல், இவை அனைத்தும் திட்ட மிட்ட துன்புறுத்தலின் வெளிப்பாடுகள். சமூகப் புறக்கணிப்பு, வயல்கள் அழிப்பு, வீடுகள் எரிப்பு. கால்நடைகள் பறிப்பு, வேலை வாய்ப்புகள் மறுப்பு என திட்டமிட்ட புறக்கணிப்பு தொடர்கிறது. இறந்தவர்களை அடக்கம் செய்யக் கூட அனுமதிப்பதில்லை

உச்ச நீதிமன்றம் தலையிட்டு கடுமையாக எச்சரித்தும் இந்த தாக்குதல்கள் குறையவில்லை. 2025-இல் முதல் ஒன்பது மாதங்களில் 579 வழக்குகளில் வெறும் 39 சம்பவங்களில் மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டுள்ளது. இதில் 71 மிரட்டல் வழக்குகள், 51 இடங்களில் வழிபாட்டிற்கு தடை, உடல் ரீதியான வன்முறைகள், சொத்துக்களை சேதப்படுத்துதல் அடக்கம் ஆனால் நீதி கிடைக்கவில்லை. உத்தரப்பிரதேசம் 316 விழுக்காடு சம்பவங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

பாஜக ஆளும் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர். அசாம் உள்பட ஐந்து மாநிலங்களில் 76 விழுக் காடு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இது தனி நபர் வன்முறையல்ல அரசு இயந்திரத்தின் ஆத ரவுடன் நடக்கும் திட்டமிட்ட அடக்குமுறை.

அரசியலமைப்பு உத்தரவாதம் அளிக்கும் மத சுதந்திரம் மட்டுமல்ல, வர்க்க அடிப்படையி லான சுரண்டலும் இங்கு நடைபெறுகிறது. பழங்குடியினர் ஏழைகள் அரசியல் அதிகாரமற்ற வர்கள் எனவே அவர்கள் எளிதான இலக்காக உள்ளனர். 70 லட்சம் பழங்குடி கிறிஸ்தவர்கள் நாட்டின் மிக தொலைதூரப் பகுதிகளில் வாழ்கிறார்கள். கார்ப்பரேட் நலன்களுக்கு வழிவிட அவர்களின் நிலங்களை காலி செய்வதன் ஒரு பகுதியாக இந்த வன்முறை ஏவிவிடப்படுகிறது.

2016-2020 இடையே குறைந்தது 21 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ராஜஸ்தானில் ஒருவர் வேண்டுமென்றே மின்சாரத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இவை வெறும் தனிமனித சம்பவங்கள்’ என்று ஒதுக்கிவிட முடியாது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்காவிடில், ஜனநாயகம் என்பது வெற்று வார்த்தையே!

# வாக்குத் திருட்டு அல்ல ஆட்சித் திருட்டு

# ஆதாரத்தோடு அம்பலப்படுத்தும் ராகுல் காந்தி

தேர்தல் ஆணையம் என்பது நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு அரசியலமைப்பு நிறுவனம். இந்நிறுவனம் பக்கசார்பின்றி பொதுவானதாக நடந்து கொள்வதற்காகவே அதற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



ஆனால் மத்தியில் பாஜக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நீதித்துறை, புலனாய்வுத் துறை, தணிக்கைத் துறை என ஒவ்வொரு அரசியலமைப்பு நிறுவனங்களும் தவறாக கையாளப்படுவதாக பொதுவான குற்றச்சாட்டு நிலவுகிறது. இதில் தேர்தல் ஆணையமும் விதிவிலக்கல்ல.

தேர்தல் ஆணையம் முழுக்க முழுக்க பாஜகாவின் ஏஜெண்டாகவே மாறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் வெளிப்படையாகவே குற்றம்சாட்டத் தொடங்கியுள்ளன. குறிப்பாக, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தேர்தல் ஆணையத்தைக் கடுமையாக தாக்கி வருகிறார். பாஜகவை வெற்றி பெறச் செய்வதற்காக அக்கட்சியுடன் தேர்தல் ஆணையம் கூட்டு சேர்ந்து வாக்குத் திருட்டு நடத்தி வருவதாக குற்றம் சாட்டுகிறார். இதற்கெல்லாம் ஆதாரம் என்ன என தேர்தல் ஆணையம் கேட்டதற்கு, கர்நாடகாவில் ஒரே தொகுதியில் 1 லட்சம் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டது தொடர்பான ஆதாரங்களை ராகுல் காந்தி கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியிட்டார்.

5 வழிகளில் வாக்குத் திருட்டு நடப்பதாக ராகுல் காந்தி விளக்கினார்.

- போலி வாக்காளர்கள்
- போலி மற்றும் இல்லாத முகவரிகள்
- ஒரே முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள்
- செல்லாத புகைப்படங்கள்
- படிவத்தின் 6-இன் தவறான பயன்பாடு

ஆனால் இந்த குற்றச்சாட்டுகள் குறித்து வாக்காளர்களுக்கு எந்த விளக்கத்தையும் தராத தேர்தல் ஆணையம், ராகுல் காந்தி பிரமாண பத்திரத்தில் கையெழுத்திட்டு புகாரளிக்க தயாரா? என விவாதம் செய்தது.

இந்நிலையில், பாஜகவும் தேர்தல் ஆணையமும் வாக்கு திருட்டில் மட்டுமல்ல ஆட்சித் திருட்டிலேயே ஈடுபட்டிருக்கிறது என ராகுல் காந்தி அடுத்ததாக ஹைட்ரஜன் குண்டை வீசி உள்ளார். அரியானா மாநில சட்டப்பேரவை தேர்தலில் நடந்த தில்லுமுல்லுகளை 'எச் பைல்ஸ்' என்ற தலைப்பில் விரிவான ஆதாரங்களுடன் விளக்கினார்.

**அரியானா மாநில சட்டப்பேரவை தேர்தலில் நடந்த தில்லுமுல்லுகளை 'எச் பைல்ஸ்' என்ற தலைப்பில் விரிவான ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார் ராகுல் காந்தி. பாஜகவும் தேர்தல் ஆணையமும் வாக்கு திருட்டில் மட்டுமல்ல ஆட்சித் திருட்டிலேயே ஈடுபட்டிருக்கிறது என அம்பலப்படுத்தியுள்ளார் ராகுல் காந்தி.**

கடந்த ஆண்டு நடந்த அரியானா மாநில சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெறும் என தேர்தலுக்கு முன்பாக வெளியான அனைத்து கருத்துக்கணிப்புகளிலும் கூறப்பட்ட நிலையில், யாரும் எதிர்பார்க்காத நிலையில் பாஜக ஆட்சியை பிடித்தது. அங்கு நடந்தது நியாயமான தேர்தல் அல்ல, ஆபரேஷன் ஆட்சி திருட்டு என கூறியிருக்கிறார் ராகுல் காந்தி. காங்கிரசின் மகத்தான வெற்றியை தோல்வியாக மாற்ற மிகப்பெரிய சதித்திட்டம் நடந்திருப்பதாக மீண்டும் ஒருமுறை பல ஆதாரங்களுடன் விளக்கம் அளித்துள்ளார். அவர் அளித்த ஆதாரங்கள் அனைத்துமே தேர்தல் ஆணையம் தயாரித்து வெளியிட்ட வாக்காளர் பட்டியல்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அரியானா தேர்தலில் பாஜக 48 இடங்களிலும், காங்கிரஸ் 37 இடங்களிலும் வெற்றி பெற்றன. இதில், வாக்கு வித்தியாசம் குறைவாக உள்ள 8 தொகுதிகளில் மொத்த வாக்கு எண்ணிக்கை 22,779. அதாவது, 22,779 வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் தோல்வி அடைந்துள்ளது. ஆனால் 25 லட்சம் வாக்குகள் திருடப்பட்டுள்ளது என்பது தான் ராகுல் காந்தியின் மைய குற்றச்சாட்டு. இதில், பிரேசில் மாடல் அழகி ஒருவரின் புகைப்படத்துடன் ராய் சட்டப்பேரவை தொகுதியில் 10 வெவ்வேறு வாக்குச்சாவடிகளில் 22 வாக்குகள் இருப்பதாகவும், ஒரே பெண்ணின் புகைப்படம், ஒரே தொகுதியில் 100 ஓட்டுகள் இருப்பதையும் ராகுல் காந்தி சுட்டிக் காட்டி உள்ளார்.

சம்மந்தப்பட்ட பிரேசில் பெண் இந்தியாவுக்கு வரவில்லை என்றும், கள்ள ஓட்டு போடவில்லை என்றும் விளக்கம் அளித்தாலும் வாக்காளர் பட்டியலில் ஒரே புகைப்படத்தில் பலரது வாக்குகள் பதிவாகி இருப்பது பொய் இல்லையே? ஒரே பெண்ணின் பெயரில் 100, 200 ஓட்டுகள் இருப்பதும் பொய் இல்லையே? இந்த நிர்வாக தவறுகளுக்கு எல்லாம் தேர்தல் ஆணையத்திடம் இருந்து எந்த விளக்கமும் இதுவரை வரவில்லை. வாக்காளர் படிவத்தில் முகம் சரியாக தெரியாத அளவுக்கு மறைக்கப்பட்ட ஒரு பெண்ணின் புகைப்படம், பல வாக்குச் சாவடிகளில் துர்கா, சங்கீதா போன்ற பெயர்களில் இடம்பெற்றுள்ளார். இதே போல ஒரே ஆணின் பிளர் செய்யப்பட்ட புகைப்படத்துடன் பல வாக்குகள் உள்ளன. அப்படி இருக்கையில், யார் வேண்டுமானாலும் நான் தான் துர்கா எனக் கூறி வாக்களித்து விட்டு செல்ல முடியும். இதுபோன்று, 1,24,177 வாக்காளர்கள் பல வாக்குச் சாவடிகளில் அரியானாவில் உள்ளதை ராகுல் ஆதாரத்துடன் காட்டியும் தேர்தல் ஆணையம் எந்த பதிலும் சொல்லவில்லை

வீடற்ற மக்களுக்கு அவர்களின் வாக்காளர் பட்டியலில் வீட்டு எண் பூஜ்ஜியம் என குறிப்பிடுவதாக சமீபத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கம் அளித்திருந்தார்.

அதை குறிப்பிட்ட ராகுல் இந்த தகவலும் பொய்யானது எனக் கூறினார். அரியானாவில் பல வாக்காளர்கள் வீட்டு எண் பூஜ்ஜியம் என குறிப்பிட்டிருப்பதாகவும், ஆனால் அவர்கள் வீடற்றவர்கள் இல்லை எனக்கூறிய ராகுல் காந்தி, சம்மந்தப்பட்ட வாக்காளர்கள் வசிக்கும் வீட்டின் புகைப்படத்தையும் வெளியிட்டார். இது, போலி வாக்காளர்களின் முகவரியை கண்டறிவதை சிக்கலாக்கும் சதி என அவர் குற்றம்சாட்டினார். இதுபோல 93 ஆயிரம் போலி முகவரியில் போலி வாக்காளர்கள் இருப்பதாக ராகுல் குறிப்பிட்டார். உத்திரப் பிரதேச பாஜக அமைச்சர் லட்சுமி நாராயணுடன் இருக்கும் பாஜக நிர்வாகி தால்சந்த் மற்றும் அவரது மகனின் பெயரும் புகைப்படமும் உத்திரப் பிரதேச வாக்காளர் பட்டியலிலும் இருக்கிறது. அரியானா வாக்காளர் பட்டியலிலும் உள்ளது. இதுபோன்று உ.பி மாநிலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் அரியானா பட்டியலிலும் இருப்பதாக ராகுல் கூறி உள்ளார். பல்வால் ஜில்லா பரிஷத் துணைத் தலைவராக உள்ள பாஜக் தலைவர் எண் 150 வீட்டில் வசிக்கிறார். அந்த முகவரியில் மட்டும் 66 வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரியானாவின் ஹோடல் தொகுதியில் ஒரே வீட்டில் 501 வாக்குகள் உள்ளன என்றும் ராகுல் குற்றம் சாட்டி உள்ளார்.

இதற்காகத்தான் நாங்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை மேற்கொள்கிறோம் என்கிறது தேர்தல் ஆணையம். சரி, வாக்கை பதிவு செய்து ஓட்டு போட்டதாக பாஜக எம்.பி விளக்கம் அளித்துள்ளார். மற்றவர்கள் தரப்பில் எந்த விளக்கமும் இல்லை.

இவர்களைப் போல் எத்தனை ஆயிரம் பேர் இரு மாநில தேர்தல்களில் ஓட்டளித்திருப்பார்கள். ஓட்டளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டளிக்கப் போகிறார்கள்? பீகாரில் எஸ்.ஐ.ஆர் முடிக்கப்பட்டு விட்டது. அதன் உண்மையான முகத்தை பாஜக தலைவர்கள் 3 பேர் இரண்டு இடங்களில் வாக்களித்து வெளிச்சம் போட்டு காட்டி உள்ளனர்.

ஒரே நபருக்கு 2 இடங்களில் வாக்குகள் இருப்பதை அழிக்கும் தொழில்நுட்பம் தேர்தல் ஆணையத்திடம் உள்ளது. ஆனால் அதை பயன்படுத்தி ஏன் டூப்ளிகேட் வாக்குகளை அளிக்கவில்லை? ஏனென்றால் அவ்வாறு செய்தால் தேர்தல் நியாயமாக நடக்கும்.

அந்த நியாயமான தேர்தலை தேர்தல் ஆணையம் விரும்பவில்லை. அதனால் ஆளும் கட்சியின் வெற்றியை உறுதி செய்வதற்காக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரும் 2 தேர்தல் ஆணையர்களும் பாஜகவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். பிரதமர் மோடியின் கூட்டாளிகள் அவர்கள் என்று ராகுல் காந்தி கூறி உள்ளார்.

வெவ்வேறு மாநிலங்களில் உள்ள இரட்டை வாக்குப்பதிவுகளை நீக்குவது தொடர்பாக தேர்தல் ஆணையம் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பீகார் எஸ்ஐஆரிலும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது நடந்து வரும் 12 மாநிலங்களில் எஸ்ஐஆரின் போதும் இரு வேறு மாநிலங்களில் ஒரே நபருக்கான ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்குகளை நீக்குவார்களா என்பதும் சந்தேகமே. எனவே, தேர்தல் ஜனநாயகத்தின் மீதான நற்சான்றிதழ்கள் தொடர்ந்து அழுத்தத்திற்கு உள்ளாகின்றன.

இது தேவையற்றது. ஆபத்தானதும் கூட. இந்தியாவில் தேர்தல்களின் நேர்மை கறைபடாமல் இருப்பதை நிரூபிப்பது, குறிப்பாக தேர்தல் ஆணையத்தின் பொறுப்பாகும். அந்த பொறுப்பை தேர்தல் ஆணையம் தட்டிக் கழிப்பது தேர்தல் முறையின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை சரிவடையச் செய்யும். இது பேரழிவிற்கு வழிவகுக்கும்.

***(நன்றி: தினகரன்)***

கழகப் பொதுச்செயலாளர் கடந்து 6 மாதங்களாக புரட்சிப் பெரியார் முழக்கத்தில் எழுதி வந்த 'நாத்திகர் சிந்தனை', தொடர் நூலாக தொகுக்கப்பட்டு, 'நாத்திகம்'– சிந்தனையை தூண்டும் கட்டுரைகள் எனும் தலைப்பில், கழக இணையதளப் பொருப்பாளர் தோழர் விஜய்குமாரின் முயற்சியில் வெளிவருகிறது.




சென்னை முற்போக்கு புத்தகக் காட்சியில் நிமிர்வோம் பதிப்பகத்தின் அரங்கில் (அரங்கு எண்– 22) கிடைக்கும்.

தொடர்புக்கு
ம.கி. எட்வின் பிரபாகரன்
+91 91768 55393

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கோவையில் தீண்டாமை ஒழிப்பு ஆர்ப்பாட்டம்!

## மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை!




திருப்பூர் வீரபாண்டி பெரியார் படிப்பகத்தில் 03-11-2025 மாலை 5 மணி அளவில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

**தீர்மானம் -1**

டிசம்பர் 24 தலைவர் பெரியார் நினைவு நாளையொட்டி கோவையில் ஜாதிய தீண்டாமைக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சட்ட நடவடிக்கையை வலியுறுத்தி கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையில் மாபெரும் போராட்டத்தை நடத்துவது.

அதற்கான சுவர் எழுத்து, சுவரொட்டி, சமூக ஊடகங்களில் பிரச்சாரம் செய்வதின் மூலமாக ஜாதியத் தீண்டாமைக்கு எதிரான இந்தப் போராட்டத்தின் நோக்கத்தை மக்களிடத்தில் எடுத்துச் செல்வது அதன் வாயிலாக தோழர்கள் மற்றும் மக்களை அணி திரட்டுவது

**தீர்மானம்- 2**

கழக வார ஏடான “புரட்சிப் பெரியார் முழக்கம்” ஆண்டு சந்தா மூன்று மாவட்டங்கள் இணைந்து மொத்தம் 500 சந்தாக்களை நவம்பர் 03 தேதி முதல் டிசம்பர் 15ம் தேதிக்குள் சேர்த்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் ஒப்படைப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தந்தை பெரியாரின் நினைவு நாளில் 24- 12 -2025 நடைபெற உள்ள ஜாதிய, தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்கு மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் தோழர்களை அழைப்பது குறித்தும், கோவை, திருப்பூர் போன்ற பகுதிகளில் தீண்டாமைக் கொடுமைகள் அதிகமாக நிலவுவது குறித்தும் விவாதித்தனர்.

டிச.25 ஆர்ப்பாட்டம் குறித்து சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்வது, தொடர்ந்து அதைப் பற்றி விவாதிப்பது, தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது போன்ற போராட்டத்திற்கு வலுசேர்க்கும் கருத்துக்களை தோழர்கள் தெரிவித்தார்கள்.

நிகழ்வில் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், தலைமைக்குழு உறுப்பினர் நிர்மல்குமார், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வகுமார், ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் செல்வராஜ், பொள்ளாச்சி நகரச் செயலாளர் சபரிகிரி, பொள்ளாச்சி ஆனந்த், திருப்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் ராமசாமி, மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, மாநகர அமைப்பாளர் முத்து, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், இனியன், ஈரோடு தெற்கு கோபிநாத், நல்லதம்பி உள்ளிட்ட தோழர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். திருப்பூர் வெங்கட் நன்றி கூறினார். தோழர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது.

## தோழர் க.கிருஷ்ணமூர்த்தி மறைவு!



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் ஓமலூர் க.சக்திவேல் அவர்களின் சகோதரர், முன்னாள் சேலம் மாவட்டத் தி.க தலைவர் தோழர் க.கிருட்டிணமூர்த்தி அவர்கள் 31.10.2025 அன்று இயற்கை எய்தினார். மறைந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இறப்பு நிகழ்வில் கழகத் தலைவர் தோழரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, இரங்கல் உரையாற்றினார். சேலம் மாவட்ட கழகத் தோழர்கள் பலரும் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர்.

## ஸ்ரீகாந்தராஜ் - இளந்தென்றல் இணையேற்பு விழா!

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டத்தைச் சேர்ந்த மனோகரன்- ராதை ஆகியோரின் மகன் ஸ்ரீகாந்த்ராஜ் அவர்களுக்கும், சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி- கோதை ஆகியோரின் மகள் இளந்தென்றல் அவர்களுக்கும் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 31.10.2025 வெள்ளிக்கிழமை அரியானூர் ஸ்ரீ ஆதித்யா மகாலில், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மகுடஞ்சாவடி திமுக தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் க.அன்பழகன் வரவேற்புரையாற்றினார்.

தி.க.துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் ஸ்ரீகாந்தராஜ்- இளந்தென்றல் ஆகியோருக்கு வாழ்க்கைத் துணைநல ஒப்பந்தம் செய்து வைத்து வாழ்த்துரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரையாற்றினார்.



கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், திமுகவை சேர்ந்த கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் திமுக சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் எஸ். ஆர்.சிவலிங்கம், திக (பெரியார் அறக்கட்டளைத் தலைவர்) பொத்தனூர் க.சண்முகம், கழகத் தோழர்கள், திக தோழர்கள், திமுகவினர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கழக ஏட்டுக்கு நன்கொடை

மதுரை கழகத் தோழர் திலீபன் - சுமித்ரா மகள் ‘இயலினி’ பெயர் சூட்டு விழாவில், ரூ.5000-ஐ பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக கழகத் தலைவரிடம் அளித்தனர்.

கழகத் தோழர்கள் ஏ. இளங்கோவன் - ஆறு. விஜயா - காரைக்குடி மகள் இ.வி. இளந்தமிழ் ஒன்பதாவது வயது பிறந்தநாளை (04-11-2025) முன்னிட்டு ரூ.2000 பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக அளித்துள்ளார்.

**நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.**

## கழகத் தோழர் தனபால் தந்தை மறைவு!

திருப்பூர் மாநகர கழகத் தலைவர் தனபால் அவர்களின் தந்தையாரும், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா அவர்களின் மாமனாருமான அய்யா ஏ.எஸ். வீரபாகு (எ) மோதிரக்காரர் 24.10.2025 அன்று இரவு உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

அவரது சொந்த ஊரான மணப்பாறை வட்டம், கீழையூர் கிராமம் அனந்தானூர் பகுதியில், 25-10-2025 மாலை 3 மணி அளவில் இறுதி நிகழ்வுகள் இரங்கல் கூட்டத்துடன் நடைபெற்றது. தனபால் கடும் முயற்சியால் சாஸ்திர சடங்கு சம்பிரதாயங்களை புறக்கணித்து தன்னுடைய அப்பாவின் இறுதி நிகழ்வை நடத்தினார்.

இரங்கல் கூட்டத்தில் கழகப் பொருளாளர் சு.துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு, தமிழ்நாடு மாணவர் கழகத்தின் திருப்பூர் மகிழவன் உள்ளிட்ட தோழர்கள் இரங்கல் உரை நிகழ்த்தினர்..

திருப்பூர் தெற்குப் பகுதி அமைப்பாளர் ராமசாமி, மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, மாநகர அமைப்பாளர் முத்து, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், மணப்பாறை பகுதி விராலி மலை ஒன்றியம் குமரேசன், மதுரை சத்தியமூர்த்தி, மாப்பிள்ளை சாமி, மதுரை முருகேசு, மற்றும் திரளானோர் கலந்து கொண்டனர்.



ஐயா வீரபாகு உடலைபெண்களே சுமந்து சென்று மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

## கோவை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம்



கோவை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் சூலூர் பன்னீர்செல்வம் (தலைமைக் குழு உறுப்பினர்) தலைமையில் இரத்தினசபாபதிபுரத்தில் (ஆர்.எஸ்.புரம்) நடைபெற்றது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

டிசம்பர் 24 தலைவர் பெரியார் நினைவு நாளில் கோவையில் ஜாதிய தீண்டாமைக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சட்ட நடவடிக்கையை வலியுறுத்தி கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாபெரும் போராட்டத்தை சிறந்த முறையில் பிரச்சாரம் செய்து அனைத்து மாவட்டத் தோழர்களுக்கும் அழைப்பு விடுத்து கூட்டு உழைப்பில் மிகச் சிறப்பாக நடத்தி கோவை மாவட்டத்தில் நிலவும் ஜாதிய தீண்டாமை கொடுமைகளை ஒழிப்பது,

‘ஜாதி நமக்கு அவமானம்; மனிதம் நமது அடையாளம்’ தலைப்பில் ஏற்கெனவே திட்டமிட்டபடி சிவானந்தா குடியிருப்பில் நடத்திய கூட்டத்தைத் தொடர்ந்து கவுண்டம்பாளையம், ரத்தினபுரி, சூலூர் , இருகூர், அன்னூர், மேட்டுப்பாளையம் பகுதிகளில் தொடர்ந்து ஜாதி எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவது

கழக வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு, நவம்பர் 1 முதல் டிசம்பர் 15-க்குள் 200 சந்தாக்கள் சேர்த்து தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் தோழர்கள் நிர்மல் குமார் (தலைமைக்குழு உறுப்பினர்), வெங்கட், ஸ்டாலின் மாதவன், நவீன், விஷ்ணு, கதிரவன், அபிலாஷ் பாண்டியன், சத்தியமூர்த்தி, மோகன கிருஷ்ணன், சுதர்சன், தரணி கலந்து கொண்டனர்.

## மாணவர்களுடன் தமிழ்நாடு நாள் கொண்டாட்டம்

01.11.2025 சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் கடலூர் மாவட்டக் கழகத்தின் அறிவியல் மன்றம் அமைப்பாளர் அறிவழகன் தலைமையில் மஞ்சகுப்பத்தில் உள்ள அவரது இல்லத்தில் பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நாள் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு பிறந்த நாளில் தந்தை பெரியார், அம்பேத்கர் கொள்கைகளை ஜாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பெண் அடிமை ஒழிப்பு, மூடநம்பிக்கைகள் மறுப்பு, புராணக் கட்டு கதைகள், மனிதனை மனிதன் தொடக்கூடாது தொட்டால் தீட்டு பார்த்தால் பாவம் போன்ற பார்ப்பனர்களின் அடிமைத்தனத்தை மாணவர்களிடையே மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சி வழியாக சிற்பி இராசன் செய்து காட்டினார்.



இளம் பாடகர் திராவிட மகிழன், பெரியார் சிவா, அறிவியல் மன்றத் தோழர்கள் உடன் இருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 13, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran